சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – ஆதிதிராவிடர் (Scheduled Castes) இந்து மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் – இட ஒதுக்கீட்டுக்குரிய உரிமையை துய்ப்பதற்கான தகுதிகள் – புதிய தெளிவுரைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சா.மெ.1)துறை

அரசாணை (நிலை) எண்.1 நாள். 02.01.2009

திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க:-

1) மைய அரசின் உள் விவகார அமைச்சகம் கடித எண்.35/1/72–RU(SCT-V) நாள் 2.5.1975.
2) மேன்மை தங்கிய உச்ச நீதிமன்ற எஸ்.எல்.பி (C) எண்.27571/95–ல் வழங்கிய தீர்ப்பு நாள்.25.1.96
3) அரசு கடித (நிலை) எண்.81, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 19.9.2000

மீண்டும் படிக்க:-

4) சென்னை உயர்நீதிதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.14769/02, நாள் 13.4.2007.
5) சென்னை, உயர்நீதிமன்ற அரசு தலைமை வழக்குரைஞரின் சட்டக் கருத்துரை எண்.26/2008 நாள் 5.6.2008.
6) சென்னை உயர்நீதிமன்ற அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞரின் கடிதம் நாள் 10.6.2008.
7) சென்னை, உயர்நீதிமன்ற அரசு தலைமை வழக்குரைஞரின் கருத்துரை எண்.43/2008 நாள் 19.09.2008

-----

**ஆணை:-**

மேன்மை தங்கிய உச்ச நீதிமன்றத்தால் மேலே இரண்டில் படிக்கப்பட்ட வழக்கினை அடிப்படையாகக்கொண்டு, மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசின் கடிதத்தில், பிறப்பால் கிருத்துவ பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தை, பின்னாளில் இந்துவாக மாறினாலும், இந்து ஆதிதிராவிடர் என சாதிச்சான்று பெறவோ, அதன் அடிப்படையில் ஆதிதிராவிடர் மக்களுக்கான இட ஒதுக்கீட்டுக்குரிய சலுகையைத் துய்க்கவோ, தகுதி இல்லை என தெளிவுரை வழங்கப்பட்டது.

**2.** அரசின் இந்த தெளிவுரையினை எதிர்த்து, சென்னை, உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண்.**14769/02** தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் **13.4.2007** அன்று பின்வருமாறு இறுதி தீர்ப்பு வழங்கியுள்ளது:-

> "x x x x We, accordingly, set aside the aforesaid clarification, as given in sub-paragraph to paragraph-2 of the letter dated 19th Sept. 2000, issued by the Secretary to Government, Adi Dravidar and Tribal Welfare Department and remit the case to the authority concerned with direction to issue a fresh clarification giving reference to the other judgments rendered by the Supreme Court, as discussed above within a period of two months. The rest part of the order contained in Letter (Ms.) No. 81 dated 19th Sept. 2000, issued by the Secretary to Government, Adi Dravidar and Tribal Welfare Department is upheld x x x x".

3) ஆதிதிராவிடர் கிருத்துவ பெற்றோர்களுக்குப் பிறந்தோர், பின்னாளில் இந்துவாக மதம் மாறினால் அவர்களுடைய இனமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் இன மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை துய்க்கத் தகுதி உடையவர்கள் ஆவார்கள் என்கின்ற அடிப்படையில், கிருத்துவ பெற்றோர்களுக்கு பிறந்த சிலருக்கு, (Born Christian) அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் கூடுதல் அரசு தலைமை வழக்கறிஞர் ஆகியோரின் கருத்துரையின் பேரில் தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக, ஆதிதிராவிடர் (Scheduled Castes) மக்களுக்கான இட ஒதுக்கீட்டில், பணி நியமனம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**4)** சாதிச்சான்று மெய்த்தன்மை அறிதலில், இந்து / சீக்கிய / புத்த மதங்களுக்கு இதர மதங்களிலிருந்து மாறிய ஆதிதிராவிடர் இனத்தவர்களை எந்த இனத்தவராக வகைப்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக வருவாய்த்துறையினரிடம் காணப்படும் குழப்பமான சூழ்நிலையினைத் தவிர்க்கும் நோக்குடன், மேலே பத்தி இரண்டில் கூறப்பட்டுள்ள சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புரை மற்றும் மைய அரசின் அறிவுரைகள் / உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் / அரசு தலைமை வழக்குரைஞர் மற்றும் அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர் ஆகியோரின் கருத்துரைகள் ஆகியவைகளை அரசு கவனமுடன் ஆய்வு செய்து இந்து / சீக்கியம் / புத்த மதத்திற்கு மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்கள், சாதிச் சான்றிதழ் பெறவும் அவர்களுக்கு இட ஒதுக்கீடு சலுகை வழங்குவது குறித்தும் பத்தி இரண்டில் தெரிவித்துள்ள சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு இணங்க ஒரு தெளிவுரையை (Clarification) அரசு கடிதம் (நிலை) எண்.**81** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் **19.9.2000**–ல் பத்தி இரண்டில் வெளியிடப்பட்ட தெளிவுரைக்குப் பதிலாக அரசு கீழ்க்கண்டவாறு வெளியிடுகிறது:-

> "ஆதிதிராவிடர் கிருத்துவ (Scheduled Caste Christians) பெற்றோர்களுக்கு மகனாக / மகளாகப் பிறந்த, அதாவது பிறப்பால் கிருத்துவராக இருப்பினும் (Born Christian) பின்னாளில் இந்து / சீக்கியம் / புத்த. மதங்களுக்கு மாறும் (conversion) நிலையிலும் மற்றும் பிறப்பால் இந்து / சீக்கியம் / புத்த மதங்களைச் சார்ந்து இதர மதங்களுக்கு மாறி பின்னர் மீண்டும் இந்து/சீக்கியம்/புத்த மதங்களைத் தழுவும் (Reconverts) நிலையிலும்,

அவர்களை, அவர் சார்ந்த இனமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவர்களுக்கு ஆதிதிராவிடர் (Scheduled Castes) சாதிச்சான்று வழங்கலாம் எனவும், தற்போது, இந்து / சீக்கிய / புத்த மதங்களைப் பின்பற்றும் ஆதிதிராவிடர் (Scheduled Castes) மக்களுக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அளிக்கப்படும் சலுகைகளை வழங்கலாம் எனவும் ஆணையிடப்படுகிறது ''.

5. இது தொடர்பாக மைய அரசின் சுற்றறிக்கை கடிதம் எண்.35/1/72 R.U(SCT.V) நாள். 2.5.1975ல் வழங்கப்பட்ட அறிவுரைகள் இவ்வாணையுடன் இணைக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ. கனகராஜ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை–5
ஆணையர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5
முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5
செயலாளர், சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை–9.
செயலாளர் வருவாய்த்துறை, சென்னை–9
செயலாளர் சட்டத்துறை, சென்னை–9
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–2
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–101
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகளின் செயலாளர்கள்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
பதிவாளர், சென்னை உயர் நீதிமன்றம், சென்னை–104
அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள்.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

**நகல்:-**
அனைத்து பிரிவுகள் ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நலத்துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

# ANNEXURE

Extract Taken from Government of India / Bharat Sarkar Ministry of Home Affairs / Grih Mantralaya , New Delhi 110.001, Lr .No. 35/1/72-R.U. (SCT.V), dated 2.5.1975.

******

**4. Cases of conversion and reconversion:-**

i. Where a Scheduled Caste person gets converted to a religion other than Hinduism or Sikhism and then reconverts himself back to Hinduism or Sikhism, he will be deemed to have reverted to his original Scheduled Caste if he is a accepted by the members of that particular caste as one among them.

ii. In the case of a descendant of a Scheduled Caste convert, the mere fact of conversion to Hinduism or entitle him to be regarded as a member of the Scheduled Caste to which his forefathers belonged. It will have to be established that such a convert has been accepted by the members of the caste claimed as one among themselves and has thus become a member of that caste.

Section Officer.